**மதவாச்சி பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

மதவாச்சி பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள்/உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதவாச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடனுக்காக எதிர்வரும் வருடங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,824,131 ஆந் நிதிக் கிரயம் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்டிராததுடன், ஒட்டுமொத்த மீதி நடைமுறையல்லாத பொறுப்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன் . | எதிர்வரும் வருடத்திற்கான செலுத்த வேண்டிய கடன்கள் நடைமுறைப் பொறுப்பகளாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகளுக்கிடையே ரூபா 8,128,453 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் சொத்துக்கள் பொழிப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்படாத காரணத்தால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | வேறுபாடுகளை பட்டோலைகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 9,015,115 கூட்டுப் பெறுமதியடைய 02 கணக்கு விடயங்களுக்காக விரிவான பட்டோலைகள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்வதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தரப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1951 இன் 14 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 99(1) மற்றும் 104(1) ஆம் பிரிவுகள் | ரூபா 1,500,000 பெறுமதியான சபைக்கு சொந்தமான உழவு இயந்திரமொன்று பதிவு செய்யப்படாது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | பதிவு செய்வதற்காக மாகாண சபைகள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான சுழற்சியான 04 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,868,526 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 35,673,108 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**வருமானம் சேகரிப்பதிலான செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி மற்றும் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 3,288,548 தொகையும் 288 அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார வரியான ரூபா 501,900 தொகையும், 52 இலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 232,750 தொகையான தொழிற்சாலை வரியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | அதிகாரச்சட்டத்தின் அறிவுரைகளுக்கமைய வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| சபைக்கு சொந்தமான பொது வியாபாரக் கட்டிடத் தொகுதியின் 31 கடைகளிலிருந்து புரநெகும வியாபாரக் கட்டிடத் தொகுதியிலிருந்து 46 கடைகளிலும் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் அதற்கு முன்னைய வருடங்களில் கேள்வி குத்தகைக்கு வழங்கிய 49 ஆதனங்களிலிருந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 19,690,818 ஆன கடை வாடகையை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| (i) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் தொலைபேசி சேவை தொலைமாற்றல் கோபுரங்களின் எண்ணிக்கை தொடர்பில ஆராய்ச்சி மேற்கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | விசாரணையொன்றை மேற்கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 88 அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வியாபார அனுமதிப்பத்திர கட்டணங்கள் ரூபா 90,500 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைப் பணம் அறவிடப்பட்டவாறு உள்ளது. | நிலுவைப் பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம், ரூபா 100,069 பெறுமதியான 545 புத்தகங்கள் மற்றம் பெறுமதி இனங்காணப்படாத 81 புத்தகங்கள் மதவாச்சிய வாசிகசாாலையிலிருந்து தொலைந்து போயிருந்ததுடன், அதற்க பொறுப்புக்ற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு, அந்த நட்டத்தினை அறவிடுவதற்கு மற்றம் அவ்வாறு புத்தகங்கள் தொலைந்து போவதை தடுப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறையொான்று அறிமுகப்படுத்த சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், உரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) புரநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு 2017 யூலை 20 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 46 கடைகள் 2018 ஆம் ஆண்டின் போது கேள்விக் குத்தகைக்கு வழங்கியிருந்துடன், அதற்கமைய 2021 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவைக் கடை வாடகை மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 32,685,100 தொகையானது அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறிய அந்த குத்தகையாளர்கள் கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கு மற்றும் மீண்டும் விலைக்கேள்வி கோருவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்கு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்க சொந்தமான 54 கடைகளுக்காக 2021 நவம்பர் 30 ஆந் திகதி நிலுவை கடை வாடகை மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 2,072,601 அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | அறவிடப்பட்டவாறு உள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டுக்கான சீ.பீ. நகரில் உள்ள 01 ஆம் இலக்க கடையிலிருந்து பெற வேண்டிய நிலுவைக் கடை வாடகை ரூபா 385,000 தொகையும், 02 ஆம் இலக்க கடையிலிருந்து பெற வேண்டிய ரூபா 256,500 தொகையும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட்டிராததுடன், தலைவரினால் அவரின் தனிப்பட்ட விருப்பின் அடிப்படையில் அந்த கடைக்காக மீளாய்வாண்டின் போது பெற வேண்டிய வருமானம் ரூபா 520,500 தொகையும் பதிவழிக்கப்பட்டிருந்தது. | முன்னள் தலைவரின் அறிவுரைக்கமைய இந்த கடை வாடகையை அறவிடக் கூடாது என்பதுடன், மீண்டும் அந்த நபர்களுக்கு கடைகள் வழங்கப்பட்டன. | ஆளுநரின் அங்கீகாரத்துடன் மாத்திரம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | புரநெகும செயற்திட்டத்திற்கு உரியதாக அரச வங்கியின் நடைமுறைக் கணக்கொன்றில் 03 வருடங்களுக்க மேற்பட்ட காலமாக ரூபா 6,803,877 தொகை காணப்படுவதுடன், அந்த பணம் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டு வருமானம் ஈட்டுவதற்காக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டிய ரூபா 4,394,172 தொகை 07 வருடங்களைக் கடந்தும், செலுத்த வேண்டிய ரூபா 1,678,511 தொகையான 03 கணக்குகள் 02 முதல் 11 வருட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்த பொதிலும், அந்த மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் 10 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | 147-7730 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் மற்றும் உழவு இயந்திரம், பவுசர் ஆகியன 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். அக்ரோ கையுழவு இயந்திரம் செயற்படும் நிலையில் உள்ளது. 49 1459 இலக்கமுடைய உழவு இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டவாறு உள்ளது. | பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 706,140 செலவிடப்பட்டு பிரதேச சபையின் மேல்தளத்தில் அமைந்திருந்த சபை மண்டபத்தில் பொருத்தப்பட்டிருந்த 06 இயந்திரங்கள், இரட்டைவட மின்சாரக் கட்டமைப்பு பொருத்தப்பட்ட காரணத்தால் மின்சாரக் கம்பிகளை பொருத்துதல் நியமத்தின் பிரகாரமத் நிர்மாணிக்கப்பட்டிராத காரணத்தால் 03 வருட காலமாக விளைற்றுக் காணப்பட்டது. | மின்சாரக் கம்பிக் கட்டமைப்பினை திருத்திமைக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | வளிச்சீராக்கல் இயந்திரக் கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு தேவையான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 227,139 ஆன செலவில் பிரதேச சபையின் மேல்தளத்தில் அமைந்திருந்த சபை மண்டபத்தில் நிர்மாணிக்கப்பட்ட மலசலக்கூட (Bathroom) கட்டமைப்பிற்காக நீர் வழங்கல் முறையொன்று நிர்மாணிக்கப்பட்டிராமையால் மற்றும் அது தொடர்பில் எனைய பணிகள் மேற்கொள்ளப்பட்டிராத காலரணத்தால் 03 வருட காலமாக பயன்படுத்த முடியாது காணப்பட்டது. | மலசலக்கூட கட்டமைப்பின் நீர் விநியோகத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மலசலக்கூட கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு தேவையான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |